# யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் நடாத்தப்படும்

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை – 2015 ஒகஸ்ட்**

**மாதிரி வினாத்தாள் - 1**

| புவியியல் - I<br>Geography - I | 22 T I | இரண்டு மணித்தியாலங்கள்<br>Two hours |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி - I 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
  பகுதி - I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி - I மற்றும் பகுதி - II ஆகியவற்றுக்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பகுதி - I**

➢ **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 1 : 10,000 என்ற அளவுத்திட்டத்தில் 1Km தூரத்தைக் குறித்து நிற்பது
1) 2 Cm  2) 10 Cm  3) 20Cm
4) 1.3Cm  5) 4 Cm  (.............)

2) 1: 50,000 அளவுத்திட்டத்திலமைந்த இலங்கை இடவிளக்கப் படங்களைத் தயாரிக்கும் திணைக்களம்
1) இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம்
2) இலங்கையின் சுற்றுச்சூழல் சுற்றுலாத்துறை வனப்பாதுகாப்புத் திணைக்களம்
3) இலங்கையின் நீர்ப்பாசன காட்டுவள அமைச்சு
4) இலங்கையின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களம்
5) இலங்கையின் நில அளவைத் திணைக்களம்  (.............)

3) LIDAR (Light Detection Surveying) என்பது
1) தரையுயரத் தகவல்களைச் சேகரித்தல் (கடல் தரைச்சாய்வு)
2) காலநிலைத் தகவல்களைச் சேகரித்தல்
3) நீரியல் ஆய்வுகளை மேற்கொண்டு தகவல்களைச் சேகரித்தல்
4) மண்ணியல் ஆய்வுகளைச் சேகரித்தல்
5) தாவரம் தொடர்பான ஆய்வுகளைச் சேகரித்தல்  (.............)

4) வெக்டர் (Vector) மாதிரியின் அனுகூலமானது
1) உண்மை உலகின் கட்டமைப்பு திரிபடைந்திருக்கும்
2) உண்மை உலகின் கட்டமைப்புத்தன்மை பேணப்படும்
3) செலவு அதிகம், உயர் தொழில்நுட்பம் தேவை
4) வலைப்பின்னல் பகுப்பாய்வினை மேற்கொள்ள முடியும்
5) முப்பரிமாணப் படங்களை பெற்றுக் கொள்ள உதவுகிறது  (.............)

5) புள்ளிவிபரவியலில் ஒகைவ் (Ogive) வளையி மூலம் காட்டப்படுவது
1) சதவீத திரளமீடிறன்வரைபு  2) சதவீத விலகல் படம்
3) திரள் மீடிறன் வளையி  4) அளியடைப்பு கோட்டு வரைபு
5) புள்ளிவிபரப் பல்வகைமை  (.............)

6) இலங்கையின் குடித்தொகைச் சேர்க்கையைக் காட்டுவதற்காக மிகவும் பொருத்தமான விஞ்ஞான ரீதியான படவரைமுறை
1) கூட்டுபார்  2) பல்கோட்டுபார்  3) எளியகோட்டுப்படம்
4) ஒன்றிணைந்த பார்வரைபடம்  5) எளிமையான பிரிக்கப்பட்ட வட்டங்கள்  (.............)


7) மழைவீழ்ச்சி, வெப்பநிலை ஆகிய இரண்டையும் வரைந்து காட்டுவதற்குப் பொருத்தமான படவரை கலைமுறை

1) பார்வரைபடம் 2) இழைவரையம் 3) கூம்புவரைபடம்
4) இணைந்த பார்வரைபடம் 5) கோட்டுநிரல்வரைபடம் (..............)

8) இலங்கை நில அளவைத் திணைக்களம் நிறுவப்பட்ட ஆண்டு

1) 1700 2) 1800 3) 1600
4) 1500 5) 1850 (..............)

9) A B C D




கீழே ABCD ஆகிய வரைபடங்களை ஒழுங்குமுறையில் தருக.

1) நிரல்பார் வரைபடம், சராசரிவிலகல் , பல்கோட்டுபார், கோட்டுநிரல் வரைபடம்
2) சராசரி விலகல் வரைபடம் , கோட்டு நிரல் வரைபடம் , பல்கோட்டு வரைபடம் , நிரல்பார் வரைபடம்
3) சராசரி விலகல் வரைபடம் , பல்கோட்டு வரைபடம், நிரல்பார் வரைபடம் , கோட்டு நிரல் வரைபடம்
4) நிரல்பார் வரைபடம் , கோட்டு நிரல் வரைபடம் , சராசரி விலகல் வரைபடம் , பல்கோட்டு வரைபடம்
5) பல்கோட்டு வரைபடம் , சராசரி விலகல் வரைபடம் , நிரல் வரைபடம் , கோட்டு நிரல் வரைபடம் (..............)

10) தரவுகள் மூலம் குறிப்பிடுகின்ற பெறுமானம் தொடர்ச்சியானதென்றால் அந்த தரவுகள்

1) கணியத்தரவுகள் 2) தொடர்தரவுகள் 3) பச்சைத்தரவு
4) பண்பறிதரவுகள் 5) பின்னகத்தரவுகள் (..............)

11) மேற்பரப்பு காற்றின் வேகத்தை அளவிட பயன்படுத்தப்படும் அளவுத்திட்டம்

1) போபோட்டின் காற்று அளவுத்திட்டம்
2) கொறியோலிசின் அளவுத்திட்டம்
3) ரிட்டர் அளவுத்திட்டம்
4) காற்றுத் திசைகாட்டி
5) அனிமாமானி (..............)

12) இலங்கையில் வழமையான நிலச்சரிவுகளினால் பாதிக்கப்படும் நான்கு மாவட்டங்களாவன

1) கண்டி, களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி
2) நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை
3) பதுளை, இரத்தினபுரி, நுவரேலியா, கேகாலை
4) கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை
5) கொழும்பு, நுவரேலியா, பதுளை, கேகாலை (..............)

13) பௌதிகவியல் சம்பந்தமான அனர்த்தங்களை உள்ளடக்கிய சரியான தொகுதி

1) புவிநடுக்கம், எரிமலைகள், சுனாமி, மண்சரிவு
2) புவிநடுக்கம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி
3) நகரத்தீ, புவிநடுக்கம், வரட்சி, சூறாவளி
4) புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு, வரட்சி, காட்டுத் தீ
5) புவிநடுக்கம், மண்சரிவு, சூறாவளி, வரட்சி (..............)

14) கீழ் இடையோட்டில் காணப்படும் கனிமம்
1) தோரியம், யுரேனியம், குரோமியம், நிக்கல்
2) சிலிக்கேற், மக்னீசியம், இரும்பு, நிக்கல்
3) இரும்பு, தோரியம், சிலிக்கேற், அலுமினியம்
4) சிலிக்கன், மக்னீசியம், இரும்பு, நிக்கல்
5) சிலிக்கேற், அலுமினியம், தோரியம், மக்னீசியம் (..............)

15) கவசத்தட்டுக் கொள்கையை முன்வைத்தவர்கள்
1) உவெகனர், கான்ற் 2) லிபிச்சன், நட்சல் 3) கீஸ், மத்தியூஸ்
4) கண்டோல், புச்சர் 5) லேமன், கூப்பர் (..............)

16) சமாந்தரமான இருபாறைக் குறைகளுக்கிடையே உயர்ந்துள்ள பாறை அழைக்கப்படுவது
1) ஹோஸ்ட் (Horst) 2) பீடம் (Bench) 3) குன்று (Hill)
4) உயரணை (Levee) 5) முகடு (Arete) (..............)

17) இலங்கையில் நீர்த்தாழைகள் அதிகமாகக் காணப்படுவது
1) வண்டல் சமவெளிகளில்
2) பொங்குமுகங்களிலும், கடனீரேரிகளிலும்
3) ஆற்றங்கரைகளிலும், வண்டற்சமவெளிகளிலும்
4) குளக்கரைகளிலும், ஆற்றுச்சமவெளிகளிலும்
5) நாட்டின் உட்பகுதிகளில் நீரையண்டிய பகுதிகளில் (..............)

18) தாவர சாகியங்களின் இனங்கள் தொடர்ச்சியாக மாற்றம் அடைதல்
1) தாவரச் சந்தானம் எனப்படும்
2) தாவரமாற்றமடைதல் எனப்படும்
3) தாவரம் வளர்ச்சியடைதல் எனப்படும்
4) உற்பத்தியாக்கிகள் எனப்படும்
5) தாவரப் போர்வை அதிகரித்தல் எனப்படும் (..............)

19) அமில மழைக்கு பிரதான காரணமாக அமையும் வாயு
1) நைதரசனும், காபனும்
2) மீதேன் வாயுவும், ஒட்சிசனும்
3) கந்தகவீரொட்சைட்டும், நைதரசன் ஒட்சைட்டும்
4) கீலியமும், ஆகனும்
5) காபனீரொட்சைட்டும், நைதரசனும் (..............)

20) இலங்கையில் தரைக்கீழ் நீர் உள்ள இடம்
1) வனாத்த வில்லு வடிநிலம் 2) முத்துராஜவெல சதுப்புநிலம் 3) கேகாலை
4) மொனராகலை 5) பெல்லன்வில வடிநிலம் (..............)

21) உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் ஒன்று
1) பிறேசில் 2) இலண்டன் 3) நோர்வே
4) யப்பான் 5) ஆப்கானிஸ்தான் (..............)

22) இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்ட மாவட்டம்
1) காலி 2) அம்பாறை 3) அம்பாந்தோட்டை
4) மாத்தளை 5) மொனராகலை (..............)

23) இலங்கையின் நிர்வாக நகரக் குடியிருப்புக்களில் ஒன்று
1) கண்டி 2) அநுராதபுரம் 3) யாழ்ப்பாணம்
4) ஸ்ரீயவர்த்தனபுர 5) வவுனியா (..............)

The National e-learning Portal for The General Education

24) ஒரு நாட்டின் குடித்தொகை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி
1) சமூக நலச் செயற்பாடுகள்
2) மதச் செயற்பாடுகள்
3) குடிவரவு
4) உட்கட்டுமான வசதிகள்
5) கல்வி வசதிகள் (..............)

25) பசுமைப் புரட்சியின் ஆரம்பமாகக் கருதப்படுவது
1) 1962
2) 1940
3) 1943
4) 1963
5) 1961 (..............)

26) ஆசியாக் கண்டத்தில் விவசாயத் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு அதிகம் காணப்படும் நாடுகளின் தொகுதி
1) மெக்சிக்கோ, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா
2) இந்தியா, பங்களாதேஷ், சீனா, யப்பான்
3) வியட்னாம், ஆப்கானிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ்
4) சீனா, ஆப்கானிஸ்தான், வியட்னாம், மாலைதீவு
5) மாலைதீவு, பூட்டான், வியட்னாம், உக்கிரைன் (..............)

27) கப்பல் கட்டும் கைத்தொழிலில் ஈடுபடும் முக்கிய நாடுகளின் தொகுதிகள் எவை?
1) யப்பான், பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான்
2) பிரித்தானியா, யப்பான், சீனா, தென்கொரியா
3) இத்தாலி, பாகிஸ்தான், ஆஜெந்தீனா, உருகுவே
4) இந்தியா, பாகிஸ்தான் , நேபாளம், உருகுவே
5) நைஜீரியா, சீனா, யப்பான், சூடான் (..............)

28) உலக குடித்தொகை தினம் கொண்டாடப்படுவது
1) யூன் 5
2) மார்ச் 22
3) யூலை 11
4) மார்ச் 8
5) ஏப்ரல் 16 (..............)

29) புவியியல் பற்றிய ஆய்வில் புள்ளிவிபர தொழில்நுட்பங்கள் கூடுதலாக பயன்படுத்தி அறிவியல் ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன இவை பற்றிக் கூறும் அணுகுமுறை
1) நடத்தைசார் அணுகுமுறை
2) இடஞ்சார் அணுகுமுறை
3) கொள்கை ரீதியிலான அணுகுமுறை
4) அளவுசார் புரட்சி அணுகுமுறை
5) தொழில்நுட்ப ரீதியிலான அணுகுமுறை (..............)

30) அடிப்பகுதியில் கனம் கூடியதான வயதமைப்பு என்பது பின்வரும் போக்கினைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது
1) உத்தம அளவு குடித்தொகையினை அடைந்த பெறுபேறாகும்
2) குடித்தொகையில் ஒரு விரைவான அதிகரிப்பு
3) குடித்தொகையில் ஒரு விரைவான வீழ்ச்சி
4) குடித்தொகையில் ஒரு பூச்சிய வளர்ச்சி
5) குடித்தொகையில் ஒரு சமமான தன்மையாகும் (..............)

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுக்கும் 2ம், 3ம் வினாவிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்தெடுத்து இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1) இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50, 000 என்னும் அளவுத் திட்டத்திலமைந்த மாத்தறை இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) இப்படப்பிரதேசத்தில் காணப்படும் பௌதிக அம்சங்கள் மூன்றையும் பண்பாட்டம்சங்கள் 3 ஐயும் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii) படத்தில் A, B, C, D எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சங்களைப் பெயரிடுக (2 புள்ளி)

iii) இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் 2 இனைத் தருக. (2 புள்ளி)

iv) வினா (iii) இல் நீர் குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

v) இப்பிரதேசத்தில் பயிரிடப்படும் பெருந்தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

vi) இப்படப்பிரதேசத்தின் தென்பகுதியில் காணப்படும் புகையிரதத் தரிப்பு நிலையத்தின் எண்ணிக்கை யாது? (2 புள்ளி)

vii) பிரதான ஆற்றினூடாகச் செல்லும் நிர்வாக எல்லைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

viii) ‘E’ எனும் எழுத்தினால் கட்டமிடப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவினை சதுர கி.மீ.ரில் தருக. (2 புள்ளி)

ix) இப்பிரதேசத்தில் நிகழக்கூடிய இயற்கை அனர்த்தம் 2 இனைப் பெயரிடுக. (2 புள்ளி)

2) i) புவியியல் தகவல் ஒழுங்கின் செயன்முறைகளைத் தருக (4 புள்ளி)

ii) புவியியல் தகவல் ஒழுங்கில் உள்ளீடு செய்யப் பயன்படுத்தப்படும் வழிகள் 5 இனைத் தருக (5 புள்ளி)

iii) புவியியல் சார் அமைவிட முறைமை (GPS) நடைமுறைக்கு வர முன்னர் பாவனையில் இடங்களை அறியப் பயன்பட்ட முறைகள் மூன்றினை உதாரணத்துடன் சுருக்கமாக தருக. (6 புள்ளி)

iv) சாதாரண இடவிளக்கவியற் படத்தினை விட எண்ணிலக்கப்படம் (Digital map) கொண்டுள்ள சிறப்புப் பண்புகளை விளக்குக (5 புள்ளி)

3) அ) அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி இரட்டைபார் வரைபட மொன்றை வரைக. (10 புள்ளி)

ஆ) 1991, 2001ம் ஆண்டுகளில் நில நெய் நுகர்வில் காணப்படும் பிரதான அம்சங்கள் இரண்டினைக் கூறுக.

இ) அட்டவணை 1 இல் தரப்பட்ட தரவினைக் குறித்துரைப்பதற்கு வேறொரு பொருத்தமான படவரைகலை முறையினைப் புனையா வரைபட உதவியுடன் ஆராய்க. (6 புள்ளி)

**அட்டவணை - 1**

நில நெய் நுகர்வு- 1991 - 2001

(நாளாந்தம் 1000 பரல்களில்)

| நாடுகள் | 1991 | 2001 |
|---|---|---|
| வட அமெரிக்கா | 19908 | 23386 |
| தென்மத்திய அமெரிக்கா | 3596 | 4693 |
| ஐரோப்பா | 14976 | 16093 |
| முன்னைய சோவியற் யூனியன் | 7980 | 3407 |
| மத்திய கிழக்கு | 3497 | 4306 |
| ஆபிரிக்கா | 1994 | 2490 |
| ஆசியா பசுபிக் | 14379 | 75291 |

மூலம்: Statisticul Review of world energy 2002